(கு.வி.மு.ச.அத்தியாயம் XXIII)

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், இராதாபுரம்

| | | |
|---|---|---|
| ஆண்டுப்பட்டிகை<br>பல்வகை<br>முதன்மைப் பதிவேடு<br>அமர்வு | } | CC.No.1493/2020 |

அரசுதரப்புக்காக சாட்சியின் சான்றுரைகள் PW-6

| | | |
|---|---|---|
| பெயர் | : | பிரபு |
| த/பெ | : | பால்பாண்டி |
| கிராமம் | : | ஆவரைகுளம் |
| வட்டம் | : | இராதாபுரம் |
| வயது | : | 40 |

**( எதிரி ஆஜர்)**

2024 ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 09 ஆம் நாளன்று, 1969 ஆம் ஆண்டு உறுதி மொழி சட்டம் (மையச் சட்டம் 44/1969)-ன் வகைமுறைகளுக்குட்பட்டு உளமார உறுதியளிக்கப்படுகிறது.

**முதல் விசாரணை :-**

1) நான் தற்போது கூடன்குளம் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணி செய்து வருகிறேன். இதற்கு முன்பு கூடன்குளம் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணி புரிந்த போது கடந்த 03.11.2019 ம் தேதி நிலையத்தில் இருக்கும் பொழுது நாகர்கோவில் ஸ்ரீராம் மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலின் பேரில் ஸ்ரீராம் எலும்பு மருத்துவமனை சென்று அங்கு சிகிட்சையில் இருந்த குறிஞ்சிகுளம் சுப்பையா மகன் நாகமணி, வயது 34 என்பவரிடம் விசாரித்து புகார் மனுவை 10.30 மணிக்கு பெற்று பின்பு நிலையம் வந்து 12.30 மணிக்கு அதன் தன்மைக்கு ஏற்ப குற்ற எண். 318/2019 இதச பிரிவுகள்

294(பி), 323, 324, 506(2) மற்றும் பிரிபு 4 பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **மேற்படி முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியிடு செய்யப்படுகிறது.**

**2)** முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் புகார் வாக்குமூலத்தை இணைத்து கனம் நீதித்துறை நடுவர் வள்ளியூருக்கு அனுப்பி வைத்தேன். இதர நகல்களை உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியும், ஒரு நகலை உதவி ஆய்வாளர் செல்வராஜ் அவர்களுக்கு விசாரணைக்கு வைத்தேன். இது சம்பந்தமாக உதவி ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u> –

1) புகார் மனுவை நான் தான் பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன் என்றால் சரிதான் காய இண்டிமேசன் எத்தனை மணிக்கு காவல் நிலையத்திற்கு கிடைக்கபெற்றது என்பது முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் எப்போது மருத்துமனையில் அனுமதிக்கப்பட்டார் என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். மேற்படி தகவல் முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்படுவது அவசியம் என்றால் சரியல்ல. புகார் மனுவை பெற்ற போது அ.சா.1 உடன் யார் இருந்தார் என்றால் அவரது மனைவி இருந்தார்.

2) முதல் தகவல் அறிக்கை 05.11.2019 அன்று தான் கிடைக்கப்பெற்றது என்றால் சரிதான். 2 நாட்கள் கால தாமதமாக அனுப்பியது குறித்து விசாரணை அதிகாரியிடம் காரணம் குறிப்பிட்டுள்ளீர்களா என்றால் தற்போது அது நினைவில்லை. காவல் நிலையத்தில் இருந்து ஸ்ரீராம் மருத்துவமனை செல்ல சுமார் 2 மணி நேரம் ஆகும். நீங்கள் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் புகார் மனு பெறப்படவில்லை என்றாலும், முதல் தகவ்ல அறிக்கை பதிவு

செய்யப்படவில்லை என்றாலும் சரியல்ல. உயர் அதிகாரி உத்தரவின் பேரில் இந்த வழக்கை பொய்யாக தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. புகார் மனுவில் இடைசொறுகலாக வார்த்தைகள் சேர்க்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்கிற்கும் எதிரிக்கும் தொடர்பு இல்லை என்றால் சரியல்ல.

(ஒம்.)திரு.மு.ஆனந்த்,பி.ஏ.,பி.எல்.,
மாவட்ட உரிமையியல் (ம)
குற்றவியல் நடுவர் நீதிமன்றம்,
இராதாபுரம்.